வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.
வழக்குஎண். CC 239/2021
வழக்குசாட்சி LW3/PW3

| பெயர் | கண்ணன் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | கலைமணி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 34 |

தேதி 20.07.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாதவரம் பகுதியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா புகார் அளித்தார். 1வது எதிரி எனது அப்பா. நான் சிறு வயதில் இருக்கும் போதே என்னை விட்டுவிட்டு என் அப்பா சென்றுவிட்டார். எங்களுக்கு தெரியாமல் திருவண்ணாமலையில் உள்ள சொத்தினை விற்றதால் எனது அம்மா மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். அந்த வழக்கு தான் மாதவரம் நீதிமன்றத்திற்கு வந்தது. எனது தாயார் என் அப்பா சொத்தை விற்று ஏமாற்றிவிட்டார் என புகார் அளித்துள்ளார். அது குறித்து போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

திருவண்ணாமலையில் சொத்து இருந்ததா என்றால் இருந்தது. எவ்வளவு சொத்து என்றால் 1 ½ ஏக்கர். காட்டாங்குளத்தில் சொத்து இருந்த்தா என்றால் எனது அம்மா சொத்து இருந்தது. அந்த சொத்தை

நான், எனது அண்ணன் செல்வம், எனது அப்பா சேர்ந்து போய் விற்றோமா என்றால் ஆமாம். ரூ. 6 லட்சம்பணத்தினை கலைமணி என்னிடம் கொடுத்தார் என்றால் இல்லை. ரூ.4 லட்சத்திற்கு விற்று அவரது மனைவி எடுத்துக் கொண்டார். போலீசார் விசாரித்த போது மேற்படி விவரங்களை கூறினேனா என்றால் கூறினேன். இவ்வழக்கு பற்றி எனக்கு தெரியவில்லைஎன்றாலும் சொத்துப் பற்றிய வழக்கு இவ்வழக்கு அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.